**OS. 1/2018** **Chokkalingam** **PW2** **11.02.2020.**

**Cross:**

இன்று நீதிமன்றத்திற்கு வர சம்மன் ஏதும் வரவில்லை. வாதி என்னுடைய 5வது தம்பி. லட்சுமியம்மாளிடம் 1978ல் வாங்கினோம் என்றால் சரி. அதைத்தான் நாங்கள் பிரித்துக்கொண்டோம். ஒரு தம்பிக்கு மட்டும் அங்கு கொடுத்துள்ளோம் வேறு இடத்தில் நாங்கள் எடுத்துக்கொண்டோம்.தம்பிக்கு கொடுக்கும்போது ஏன் பதிவு செய்யவில்லை என்றால் அப்போது பாகம் பிரித்துக்கொண்டோம். ஆக்கிரமிப்பை அகற்ற கோரி என்னுடைய தம்பி பெயரில் தான் கடிதம் அனுப்பினார். ஏன் என் பெயரில் அனுப்பாமல் என் தம்பி பெயரில் அனுப்பினீர்கள் என்று கேட்டீர்களா என்றால் இல்லை. நான் வாங்கிய சொத்திற்கும் என் தம்பி வீடு கட்டியதற்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்றால் தவறு. என் தம்பி வீடு கட்டியுள்ள இடம் பாட்டை என்றும் அதனால் தான் தாசில்தார் என் தம்பி பெயருக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் தவறு. அது அரசாங்கத்திடம் என்றும் அதனால்தான் அந்த சொத்தை மட்டும் வாட்சா ஆக பிரித்துக்கொண்டடோம் என்று சொல்கிறேன் என்றால் தவறு. நான் வாங்கிய இடத்தில் என்னுடைய அக்கா தங்கைகளுக்கு பங்கு கொடுக்கவில்லை என்றால் சரி. என் தம்பிக்கு மட்டும் தான் கொடுத்தேன். வாதி என்னுடைய தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியளிக்கிறேன் என்றால் தவறு.